

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஆவுடையார் கோவிலில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை, புதுக்கோட்டை டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய சிறப்பு மருத்துவ முகாமை முன்னாள் எம்.எல்.ஏவும், ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான உதயம் சண்முகம் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன் முன்னிலையில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர். இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை தொகுதியில் புதியதாக மாணவர் அணிக்கு உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தினை மாவட்ட அலுவலகத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் – பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.கே.தமிழ்வேல்கவி ஆகியோர் முன்னிலையில் கிழக்கு பகுதி அமைப்பாளர் சு.தனுஷ், துணை அமைப்பாளர்கள் எல்.தனுஷ், செ.சந்தோஷ்குமார், ச.நவநீதகிருஷ்ணன், ம.அருண்குமார், மேற்கு பகுதி அமைப்பாளர் க.விக்னேஷ், துணை அமைப்பாளர்கள் மூ.கௌதம், த.சுகேஷ்குமார், ஆர்.அருண்குமார், எம்.கேசவன், பி.தீபா பிரகாஷ் ஆகியோரிடம் வழங்கினார்.

### இந்தியாவிலேயே பொருளாதாரத்திலும் கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும், வர்த்தகத்திலும்

# நம்பர் 1, மாநிலமாக தமிழ்நாட்டைக் கொண்டுவந்துள்ளார் நமது முதலமைச்சர்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர் ஏப் 9-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் வர்த்தக அணி மற்றும் 7 வது வார்டு திமுக சார்பில் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ஒரு நாள் எழுவர் கால்பந்து போட்டி திருவேற்காடு நகரம் கீழ் அயனம்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் கால்பந்து விளையாட்டு திடலில் மாவட்ட அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தலைமையில் நடைபெற்றது.

இதில் நகரக் கழகச் செயலாளர் என். இ.கே.மூர்த்தி வரவேற்றார் பொதுகுழு உறுப்பினர் எஸ்.சங்கர், வார்டு செயலாளர் மா. வினாயகம், சி.தெய்வசிகாமணி, ப.ருக்மணி பவுல், ஐ.ஜேக்கப், பூவை எம்.ராம்பாபு, தாமோதரன், பேரத்தூர் மூர்த்தி, ஏ.பி.செல்லதுரை, வெங்கடேசன், தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்த போட்டிகளில் 16 அணிகள் கலந்து கொண்டனர் இறுதியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை



அமைச்சர் ஆவடி சாமு. நாசர் 10 லட்ச ரூபாய் மதிப்பிலான இரண்டு சக்கரம் ராயல் என்ஃபீல்ட் வாகனம் LED தொலைக்காட்சிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்

நிகழ்ச்சி முன்னதாக மைதானத்தில் விளையாடிக் கொண்ட இளைஞர்களுடன் கால் பந்து விளையாடி தொடங்கி வைத்தார்

அப்போது அமைச்சர் சா.மு. நாசர் பேசியதாவது: தமிழகத்தில் பல தலைவர்களின் பிறந்தநாள் விழாவை அந்தந்த கட்சியினர் கொண்டாடினார்கள். அப்படி கொண்டாடப்படும் விழாக்கள் அந்தந்த தனி நபர்களின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டும், அதன் மூலம் அந்த கட்சியின் தலைவர்களின் கவனத்தை ஈர்த்து பதவிகளை பெறுவதற்காக சுயநலமாக பிறந்த நாள் விழாக்களை கொண்டாடியுள்ளனர்.

தமிழக முதல்வர் அவர்கள் தனது பிறந்த நாளை மிக எளிமையாக கொண்டாடுவதுடன், மக்களுக்கு தேவைப்படும் நல உதவிகளை செய்யும் நிகழ்ச்சியாக நடத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதன்படி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்குவது மட்டுமலல்லாமல்

இளைஞர்களின் வாழ்வில் தங்களை வளர்த்துக் கொள்ளும் விதமாக விளையாட்டு துறையில் அவர்களை போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிப் பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்குவதும் அவர்களுக்கு தேவையான உபகரணங்களையும் வழங்கி தமிழக முழுவதும் மக்கள் நலன் சார்ந்த விழாவாக சீரோடும் சிறப்போடும் கொண்டாடி வருகிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் மிகச் சிறப்பான முறையில் இந்த விழாவை நடத்தி வரும் பவுல் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சிலருக்கு அவர்கள் இருக்கும் பதவியினால் மரியாதை ஏற்படும். அந்த பதவியை விட்டு போய்விட்டால் மரியாதை போய்விடும். ஆனால் சிலர் அந்த பதவியில் அமர்வதால் அந்த பதவிக்கு பெருமை உண்டாகும்.

கர்மவீரர் காமராஜர் பேரறிஞர் அண்ணா முத்தமிழ் முத்தமிழறிஞர் கலைஞர், முதலமைச்சர் தளபதி ஆகியோரால் அந்த முதலமைச்சர் பதவிக்கு பெருமையாகும். அதுபோல விளையாட்டுத்துறை அமைச்சராக துணை முதலமைச்சர் இருப்பதால் தான் அந்த விளையாட்டு துறைக்கே பெருமை உண்டாகியுள்ளது.

அவர் பொறுப்பேற்றபின் விளையாட்டு துறை பொலிவும் சிறப்பும் அடைந்துள்ளது. இரவு நேரத்திலேயே கார் ரேஸ் மற்றும் ஒலிம்பியாஸ் போட்டிகளை உலகமே வியக்கும் வகையில் மிகச் சிறப்பான முறையில் நடத்தி காட்டினார்கள்.

ஒன்றிய அரசு நமது தர வேண்டிய 4000 கோடி ரூபாயை தரவில்லை. வெள்ளப் பாதிப்புக்கு கொடுக்க வேண்டிய நிதியை வழங்கவில்லை. கொரோனாவுக்கு தர வேண்டியதையும் தரவில்லை. ஜிஎஸ்டி மூலம் நமக்கு கொடுக்க வேண்டியதையும் கொடுக்கவில்லை. கல்வி நிதியையும் தரவில்லை.

பத்தாண்டு காலம் நடந்த ஆட்சியில் கஜானாவை காலியாக விட்டுச் சென்றது எடப்பாடி அரசு. ஆனால் அதையெல்லாம் சமாளித்து மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் முதல்வர் செயல்படுத்தி வருகிறார்.

இந்தியாவிலேயே பொருளாதாரத்திலும் கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும், வர்த்தகத்திலும் நம்பர் ஒன் மாநிலமாக தமிழகத்தை கொண்டு வந்துள்ளார் நமது முதலமைச்சர். இதனை ஒன்றிய திட்டக்குழுவே அறிவித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று முதலமைச்சர் கூறியுள்ளார். அது போதாது. அதையும் மீறி 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று அமச்சர் நாசர் நிகழ்ச்சியில் பேசினார்.

சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், நிர்வாகிகள் நும்பால் ஆசை தம்பி, என்.ராஜி, டிவி. இளங்கோவன், கே.பி.எஸ். சுதாகர், விஜய சாரதி, ஐடிவிங் பிரவீன் குமார், பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.பிரியாகுமார் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பா.விஜய சாரதி வார்டு இளைஞர் அணி செயலாளர் ப.சக்கரவர்த்தி நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுந்தரவேல் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

### மகாவீர் ஜெயந்தி தினம்: மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும்

# 4 இறைச்சிக் கூடங்களும் மூடல்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,ஏப்.9-

மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் 4 இறைச்சிக் கூடங்களும் அரசு உத்தரவின்படி மூடப்படுகின்றன என பெருநகர சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையின் (கால்நடை மருத்துவப்பிரிவு) கட்டுப்பாட்டில் இயங்கும் பெரம்பூர், வில்லிவாக்கம், கள்ளிக்குப்பம் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய 4 இறைச்சிக் கூடங்களும் நாளை (10.04.2025 - வியாழக்கிழமை) மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு அரசு உத்தரவின்படி மூடப்படுகின்றன.

ஆகவே, இறைச்சிக் கூட வியாபாரிகள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் புல்வயல் ஊராட்சி நிலையப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்ச்சியில் அன்னவாசல் ஒன்றிய செயலாளர் கே.எஸ். சந்திரன் கலந்து கொண்டு மாணவ – மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். சுவிளங்கிய உடன் ஊராட்சி செயலாளர் பரமசிவம், சிங்கமுத்து, பிரபு, தங்கராஜ் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை; எஸ்.சசிகுமார் தலைமை!

# 76வது வட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## கு.செல்வப்பெருந்தகை - துரை. வைகோ - சிந்தனைச் செல்வன் - மேயர் பிரியா சிறப்புரை!

சென்னை, ஏப்.9-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் தெற்குப் பகுதி 76-வது வட்ட கழகம் சார்பில் மனிதநேயம் 46 முதல்வரால் தழைத்து தமிழ்நாடு முதலிடம் ஆனது புகழோடு என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (09.04.2025, புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் வெங்கட்டம்மாள் சமாதி, பிரிக்கிளின் சாலை (ஐந்து விளக்கு அருகில்) நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார். 76வது வட்ட கழக செயலாளர் எஸ்.சசிக்குமார் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வ பெருந்தகை, ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை.வைகோ, வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச்செல்வன் எம்.எல்.ஏ.,

தலைமை செயற்குழு உறுப்பினர் மேயர் ஆர். பிரியா ராஜன், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக துணை அமைப்பு செயலாளர்

வழக்கறிஞர் ப.தாயகம்கவி, மாநில பொறியாளர் அணி இணை செயலாளர்

அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ. மற்றும்

அம்பத்தூர் வடக்குப் பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., திரு.வி.க. நகர் தொகுதி பார்வையாளர் என். கிருஷ்ணமூர்த்தி, திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி செயலாளர் எம்.சாமிகண்ணு, திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன்,

6வது மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், மாவட்ட பொருளாளர்

இசட்.ஆசாத், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இவ்விழாவில் வானவில் விஜய் டி.லோகேஷ், லயன் பி.உதயசங்கர், நா.துலுக்காணம், எம்.பெரோஸ் கான், இரா.வீரமணி, கா.ராஜ்முகமது, தமிழ்ச் செல்வி சசிகுமார், ரமணி லோகேஷ், மு.சரவணன், பி.ஜெ.துளசிங்கம், அ.கருணாநிதி, அ.கோவிந்தன், பி.சுகுமார், வனாஜாசண்முகம், த.கருணாநிதி, வே.து. தாமரைசெல்வம், ர.கலைவேந்தன், அ.கதிரவன், எல். சுப்பிரமணி, ஒட்டேரி ஆர். சூரி, நெல்லை மா.முத்தையா, கி.நாகலிங்கம், எச். திவாகர், கனல்கங்கா, ப. ரீதர்ராஜன், வழக்கறிஞர் அ.சேதுராமன், எஸ்.சதீஸ்குமார், பட்டா எஸ்.எல். நாராயணன், எப்.அபு, ஈஸ்வரி கண்ணன், பி.புகழ்செந்தில், ரா.சுரேஷ், பட்டாளம் எம்.செந்தில் குமார், பா.பி. தாஸ், எம்.சக்திவேல், சாவித்திரி அன்பழகன், சாந்தி மாசிலாமணி, கோ.கருணாகரன், ஏ.ஜி. எஸ்.கோல்டுஜி, புல்லட் என்.பாஸ்கர், இரா.தனசேகர், அ.மகேஷ்,

தெற்கு பகுதி வட்ட செயலாளர் வி.க.வெங்கடேசன், எம்.தமீம், பொல்லு (எ) டி.சுரேஷ், ஜி.ஏழுமலை, ஆ.குரு மூர்த்தி, ரா. ஞான சௌந்திரி, கே. முருகா, என்.எம் செந்தில், சரவணன், கே. முரளி (எ) குள்ளா மற்றும் பலர் கொள்கின்றனர்.

### பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட

# வர்த்தகர் அணி சார்பில் தண்ணீர் பந்தல்!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை,ஏப்.9-

சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் எண்ணூர் கத்திவாக்கம் 2வது வட்டத்தில் நலத்திட்ட உதவிகள் மற்றும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் 2வது வட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா, மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில், மாவட்ட வர்த்தக ராணி அமைப்பாளர் லயன் வி.தியாகராஜன், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ் குமார், அவர்கள் வரவேற்று அ.பாண்டியன், இ.வி.கருணாநிதி, பி.ரமேஷ், ஜெ.திலகர் கே.முனுசாமி, எஸ். தேவி, அவர்கள் முன்னிலையில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் நலத்திட்ட உதவிகள் மற்றும் தண்ணீர் பந்தல் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன், கழக பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி உரையாற்றினார்.

மாவட்ட மீனவனை துணை அமைப்பாளர் டி.தேசப்பன் 2வது வட்ட துணைச் செயலாளர் எஸ். தேவி 2வது வட்டக் கழக பகுதி பிரதிநிதி என்.சத்திய மூர்த்தி கழக பேச்சாளர் டைலர் மணி, முன்னாள் வட்ட துணை செயலாளர் சிவகுமார், வி.ஆல்பர்ட், பி.சிவா, முருகன், வள்ளுவர் கிராம செயலாளர் கழக செயல் வீரர் ஏ.சரத்குமார், அஜித், ராமமூர்த்தி நகர் கிராம தலைவர் சுந்தரேசன், ஆர்.சுரேஷ் ஆர்.எஸ்.ரோடு கழக முருகன், சதீஷ், ஆர். சுரேஷ் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் கே.முனுசாமி, கே.கருணாகரன், அந்தோணி, சார்லஸ், பழக்கடை ராஜா, மாரி, புகழ், வேலுமணி, பவுல்ராஜ், தங்கமணி, சத்யா நகர் சதீஷ், உதயகுமார், ஜி.பாண்டு, பாஸ்கர், லோகநாதன், சுரேஷ்,

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர், இறுதியில் கே.சந்தோஷ் குமார் நன்றி உரை ஆற்றினார்.

### ஜெ.மொகிந்தர் அமர்நாத் தலைமை! எழும்பூர் தொகுதி -

# தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் 61 ‘அ’ வட்டத்தில் நீர்மோர் பந்தல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார்!

சென்னை,ஏப். 9-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் அறிவிப்பின்படி, சென்னையில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் பொது மக்களுக்கு உடல் வெப்பத்தை தணிக்கும் வகையில் சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் 61 அ வட்டம் புதுப்பேட்டை வேலாயுதம் தெரு அருகே, தகவல் தொழில்நுட்ப அணியின் எழும்பூர் தொகுதி அமைப்பாளர் ஜெ.மொகிந்தர் அமர்நாத் தலைமையில் நீர் மோர் பந்தலை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, வெள்ளரி, கிரினி பழம், ரோஸ்மில்க், சர்பத், பழ வகைகள் உள்ளிட்ட உடலுக்கு குளிர்ச்சி தரும் பொருட்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், முன்னாள் எம்.எல்.ஏ. சா.மணிமுடி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் பிரதீப் குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வட்ட செயலாளர் இ.மொய்தீன், பாபு (எ) சந்திரசேகரன், எஸ். ரசூல், தில்லை குமார், மா. வெற்றி வீரன், மு ஜெயக்குமார், தொண்டரணி அமைப்பாளர் விஜயகுமார், நெசவாளர் அணி அமைப்பாளர் சம்பத் குமார், S பாலாஜி, தமிழ்மணி, எம்.கே ரவிவர்மன், மா.ஷர்மிளா, வே. சுரேஷ், ரா.கோபி,எம் முத்து, அ.தங்க செல்வம், ஸகுர் என்கிற ரஹிபுல்லா, முத்து இப்ராஹிம் ஷா, கிருஷ்ணன், கே. ஜெயக்குமார், வெற்றிவேலன்,மோகன் குமார், சுகன்யா, ஷேக் பரீத், முனி வேல், முனீஸ் தயாநிதி, பாலாஜி, பிரியதர்ஷினி, மேகலை, தனசேகர் என்கிற பாபு, எஸ் பாலு, இம்ரான் அலி,முகமதுபிலால்,விஸ்வநாதன் செந்தில்,பன்னீர்செல்வம், எக்மோர் அமீர், அஜித், ஜீவா, தமிழரசு,சங்கீதா , விவேக்,சங்கவி,உள்ளிட்ட பகுதி, வட்ட, நிர்வாகிகள் மற்றும் ஆட்டோ ஸ்டாண்ட் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் சட்டமன்றத் தொகுதி அருகம்பாளையத்தில் மாபெரும் கபாடி போட்டியை கரூர் மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.